
## எச்சிலில் உருள்வது யாரால்?




கரூர் மாவட்டத்தில் உள்ள ஒரு கோயிலில் எச்சில் இலைகளில் உருண்டு, நேர்த்திக்கடன் செலுத்துவதற்கு விதிக்கப் பட்டிருந்த தடையை நீக்கி, சமீபத்தில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஏற்கெனவே, கர்நாடகாவில் இதுபோன்று எச்சில் இலைகளில் உருளும் சடங்குக்கு, உச்ச நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டதை மேற்கோள் காட்டியே, தமிழ்நாடு உயர் நீதிமன்றமும் 2015-இல் கரூர் எச்சில் இலை சடங்குக்குத் தடை விதித்தது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் வழங்கியுள்ள தீர்ப்பில், “சமூக விருந்தில் பங்கேற்கும் பக்தர்கள் விட்டுச் சென்ற வாழை இலைகளில் உருள்வது, அவருக்கு ஆன்மிகப் பலனைத் தரும்” என்ற நம்பிக்கை, அந்தத் தனிப்பட்ட நபரின் ‘ஆன்மிகத் தேர்வு’ என்று குறிப்பிட்டுள்ளார். இந்தத் தீர்ப்புக்கு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனின் கருத்துக்கும் பரவலாகக் கண்டனங்கள் எழுந்தன. பகுத்தறிவுக்கும் பொது சுகாதாரத்துக்கும் எதிரான இந்தச் சடங்கை நீதிமன்றமே அங்கீகரிப்பது சரியா என்ற கேள்வி எழுந்தது.

குறிப்பாக, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி “ஜி.ஆர்.சுவாமிநாதனின் நிலைப்பாடு அரசியலமைப்பின் கொள்கைகளின் உண்மையான நோக்கத்துக்கு எதிரானது மற்றும் இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்புக்கு எதிரானது” என்று உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்குப் புகார் கடிதம் எழுதியுள்ளார். இந்நிலையில், எச்சில் இலையில் உருளும் சடங்கை எதிர்த்து, திராவிடர் விடுதலைக் கழகம் ‘எச்சிலில் உருள்வது யாரால்?’ என்னும் சிறுநூல்வெளியீட்டை 30 ரூபாய் விலையில் வெளியிட்டுள்ளது. நூலினைப் பெற இந்த எண்ணுக்கு 94986-56683 ‘வாட்ஸ் ஆப்’ செய்யலாம்.

## ஃப்ளாஷ்பேக்






சே.அப்துல் லத்தீப்



### இசையரசிக்கு அஞ்சல் தலை!

2005-ஆம் ஆண்டு சென்னை, அண்ணா அறிவாலயத்தில் இசையரசி எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களின் அஞ்சல் தலை வெளியீட்டு விழா, முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. அந்த விழாவைத் தொகுத்து வழங்கும் வாய்ப்பு, அஞ்சல் பயிற்சி மைய மேனாள் உதவி இயக்குநராக இருந்த எனக்குக் கிடைத்தது. முத்தமிழறிஞர் வெளியிட்ட இந்த தபால் தலையை கர்நாடக சங்கீதக் கலைஞர் டி.கே.பட்டம்மாள் அவர்கள் பெற்றுக்கொண்டார். அன்றைய ஒன்றிய அமைச்சர் தயாநிதி மாறன், கவிஞர் வாலி ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

**- சே.அப்துல் லத்தீப், திருக்குவளை, நாகப்பட்டினம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### மசோதா தாக்கல்!

1957-ஆம் ஆண்டு நவம்பர் மாதம், 3-ஆம் தேதி தஞ்சாவூரில் ‘திராவிடர் கழக மாநாடு’ நடைபெற்றது. அந்த மாநாட்டில்தான் “சாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சாசனத்தைத் தீயிட்டுக் கொளுத்துவது” எனும் தீர்மானத்தை நிறைவேற்றினார் தந்தை பெரியார். அந்தப் போராட்டம் அறிவிக்கப்பட்ட, மூன்றாவது நாளே பெரியார் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுதலை ஆனார். அதேநாளில் அப்போதைய சென்னை மாகாண அரசு, தேசியக் கொடி, காந்தி சிலை மற்றும் அரசியல் சட்ட அவமதிப்புகளைத் தடுக்கும் பொருட்டு மசோதாவைக் கொண்டு வந்தது.

## சீரணி ⇒ இளைஞர் அணி 15

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**



ஓவியம் : ரவி பேலட்

# ‘அண்ணா சீரணி’யின் இறுதி அத்தியாயம்!

*1967-ஆம் ஆண்டு ஆகஸ்ட் தொடங்கி, 1968 டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கிய சீரணி அமைப்பு, கிராமம்-நகரம் என வித்தியாசம் பாராமல் பல இடங்களில் நிறைய வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டது. அதில் எந்த ஒரு பிரதிபலனும் பாராது தங்களின் உழைப்பை இலவசமாகக் கொடுத்தனர் மக்கள். அவர்களில் பெரும்பாலும் இளைஞர்கள்!*

*அந்த இளைஞர்களில் ஒருவர்தான் ச.இறைவன். தஞ்சை மாவட்டக் கழக முன்னோடி ஏ.வி.பதி அவர்கள் தஞ்சை மாவட்ட சீரணி அமைப்பாளராக இருந்தபோது, அதில் தன்னை இணைத்துக்கொண்டார் இறைவன். அவர்கள் மேற்கொண்ட முதல் பணி, தஞ்சை குரும்பூண்டி கிராமத்தில் இருந்த குளத்தைத் தூர்வாரியது. அந்த அனுபவத்தை அவரே சொல்கிறார் கேளுங்கள்...*

*“நாட்டாணி என்ற சிறிய ஊரை உள்ளடக்கிய குரும்பூண்டி கிராமத்தில், ஏ.வி.பதி அவர்களின் தலைமையில் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் அந்தக் குளத்தைத் தூர்வாரினோம். தூர்வாரத் தேவைப்பட்ட மண்வெட்டி உள்ளிட்ட தளவாடச் சாமான்கள், ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் வழங்கப்பட்டன.*

*மதிய உணவை அந்த ஊர் மக்கள் ஏற்பாடு செய்தனர். இப்படி, நான்கு நாட்கள் பணியாற்றினோம். 55 ஆண்டுகளுக்குப் பிறகும் அந்தக் குளம் அப்படியே இருக்கிறது. நீர்தான் அதிக அளவில் இல்லை” என்கிறார் அந்த முன்னாள் தஞ்சை நகர் மன்றத் தலைவர்.*

*ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, அண்ணா காலத்து சீரணி அமைப்பினர் உருவாக்கிய ஏராளமான பொதுச் சொத்துகளுக்கு ஓர் எளிய உதாரணம் இது. அவற்றில் பெரும்பாலான சொத்துகள்*



ச.இறைவன்



*இன்றும் மக்கள் பயன்படுத்தும் நிலையில் இருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது.*

*அண்ணா அவர்கள் 1968-ஆம் ஆண்டு டிசம்பர் 11 அன்று மாலை, சீரணி அமைப்பு தொடங்கப்பட்டதில் இருந்து, அதுநாள் வரையில் சீரணியினர் ஆற்றிய பணிகளையும், இனி முன்னெடுக்கப் போகிற பணிகள் குறித்தும் மாநில அளவிலான ஆலோசனை ஒன்றை, அவரது இல்லத்தில் ஏற்பாடு செய்திருந்தார். அதில் அன்றைய பொதுப்பணித் துறை அமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர், சீரணித்துறை அமைச்சர் மா.முத்துசாமி, சமூகநலத்துறை அமைச்சர் சத்தியவாணி முத்து, பொதுநலத்துறை அமைச்சர் சாதிக் பாட்சா, மாவட்ட சீரணித் தலைவர்கள் நீல நாராயணன், பி.கே.முத்துராமலிங்கம், முதல்வரின் நேர்முக உதவியாளர் சு.சொக்க லிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.*

*அந்த நாட்களில் எல்லாம், அண்ணா அவர்கள் புற்றுநோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். சீரணியைப் பொறுத்த அளவில் அண்ணா கலந்துகொண்ட கடைசி நிகழ்வு என்று மேற்கண்ட கூட்டத்தைச் சொல்லலாம். 1969-ஆம் ஆண்டு பிப்ரவரி 3 அன்று அண்ணா மறைந்தார். அத்துடன் அண்ணா காலத்து சீரணியின் இறுதி அத்தியாயம் முடிவு பெற்று, ’கலைஞர் கால சீரணி’யின் புதிய அத்தியாயம் தொடங்கியது..!*

**...வெற்றிநடை போடும்.**

**சீரணியைப் பொறுத்த அளவில் அண்ணா கலந்துகொண்ட கடைசி நிகழ்வு என்று மேற்கண்ட கூட்டத்தைச் சொல்லலாம். 1969-ஆம் ஆண்டு பிப்ரவரி 3 அன்று அண்ணா மறைந்தார்.**

### சினிமாவில் சீரணி..!

எம்.ஜி.ஆர் அவர்களின் கதை, நடிப்பில், ப.நீலகண்டன் இயக்கத்தில் 1968-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று வெளியான ‘கணவன்’ திரைப் படத்தில் ‘சீரணி’ குறித்து காட்சி ஒன்று உள்ளது. கதையின் போக்கில் மிக முக்கியமான திருப் பத்தை ஏற்படுத்துவதில் அந்தக் காட்சிக்கு இடமுண்டு.

படத்தின் முதல் காட்சியிலேயே சீரணி இயக்கம் பற்றிச் சொல்லப்படுகிறது. பட்டதாரி வேலய்யா (எம்.ஜி.ஆர்), மில் ஒன்றில் வேலை பார்த்துவிட்டு இரவில் வீடு திரும்பும் வழியில், சீரணித் தொண்டர்கள் சாலை போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், அவர்களுடன் வேலய்யாவும் இணைந்துகொண்டு பொதுச் சேவை செய்கிறார். அது அவருக்கே தெரியாமல் படம்பிடிக்கப்படுகிறது.



அதே இரவில் அவர், தான் பணியாற்றும் இடத்தில் காசாளரைக் கொன்றுவிட்டதாக அவர் மீது வழக்கு பதியப்படுகிறது. சாட்சியங்களும் சூழ்நிலையும் சாதகமாக இருக்க நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதிக்கிறது. பிறகு ஒரு சமயம், திரையரங்கம் ஒன்றுக்குச் செல்லும் நீதிபதி, படம் தொடங்குவதற்கு முன்பு போடப்படும் ’நியூஸ் ரீல்’ ஒன்றைப் பார்க்க நேரிடுகிறது. அந்த செய்திப் படத்தில் சீரணித் தொண்டர்கள் சாலை போடும் பணி காட்டப்படுகிறது. அதில் வேலய்யாவும் இருப்பது தெரிந்து, அந்தக் கொலையை அவர் செய்திருக்க முடியாது என்ற முடிவுக்கு வருகிறார் நீதிபதி.

இவ்வாறு சீரணி, சினிமாவின் மூலமாகவும் மக்களிடம் சென்றடைந்தது.

## பொய்ப்பெட்டி 15

**கோவி.லெனின்**

**“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...”**

# எதிர்க்கட்சி என்றால் ஏளனமா?

***தமிழ்நாட்டின் 40 எம்.பி.க்கள் எதிர்க்கட்சி யாகி விட்டதால், ‘கேன்டீனில் சாப்பிடத்தான் லாயக்கு’ என்றும், ‘தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எதுவும் செய்ய முடியாது’ என்றும், பா.ஜ.க.வின் தமிழிசை சவுந்திரராஜன் உட்பட பலரும் சொல்கிறார்களே?***

*பசித்தால் எந்த மனிதரும் கேன்டீனுக்குத்தான் போவார்கள். ஆனால், பா.ஜ.க.வினர் ‘அண்டா வுடன் தூக்கிச் செல்வதில்’ பழகியவர்கள் என்பதால் விமர்சிக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. நாடாளுமன்றத்தில் ஏறத்தாழ சரிக்குச் சரியான அளவில், இந்தியா கூட்டணி யினர் இடம்பெற்றிருக்கிறார்கள். அதனால் முன்பு போல பா.ஜ.க.வின் அதிகாரம்-ஆணவப்போக்கு இனி எடுபடாது.*

*மாநிலக் கட்சிகளின் தயவில்தான் இப்போது மோடியின் அரசாங்கம் நீடிக்கிறது. தி.மு.க என்ற மாநிலக் கட்சி முன்னெடுத்த இந்திய அளவிலான கூட்டணி முயற்சி, தேசிய ஜனநாயகக் கூட்டணியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத் தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளன.*



*சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோதுதான் நங்கவரம் விவசாயத் தொழிலாளர்களுக்காகப் போராடி உரிமையைப் பெற்றுத் தந்தார் கலைஞர். எதிர்க்கட்சியாக இருந்தபோதுதான் பேரறிஞர் அண்ணா, தனது காஞ்சிபுரம் தொகுதிக்கு முதலமைச்சர் காமராஜரை அழைத்து வந்து, ‘கோரிக்கை மாநாடு’ நடத்தி மக்களின் குறைகளைத் தீர்த்திடச் செய்தார். எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோதுதான் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது கொளத்தூர் தொகுதியில், **‘வாங்க பேசலாம்’** என்ற நிகழ்வை நடத்தி மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து நிறைவேற்றச் செய்தார்.*


*எதிர்க்கட்சி வரிசையில் இருப்பதாலேயே அந்த மாநிலத்தின் நலன்களை ஒன்றிய அரசு புறக்கணிக்கும் என்றால், அது ஜனநாயகம் அல்ல. அப்படிச் செய்வது, அந்தந்த மாநில மக்களின் மீது நடத்தப்படும் கொடூரத் தாக்குதல் ஆகும். பத்தாண்டு காலம் அதைத்தான் செய்து வந்தது, மோடியின் பா.ஜ.க. அரசு. இப்போது தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள மாநிலக் கட்சிகளின் தயவில் ஆட்சியில் உள்ள ‘மைனாரிட்டி’ பா.ஜ.க அரசால் மாநிலங்களைப் புறக்கணிக்க முடியாது. பழைய இறுமாப்புடன் புறக்கணித்தால் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் குரல் மட்டுமல்ல, பா.ஜ.க. ஆட்சிக்கு ஆதரவளித்துள்ள மாநிலக் கட்சிகளின் குரலும் சேர்ந்தே ஒலிக்கும். தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கு நன்மையே விளையும்.*

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**508**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24-26 RNI No.1244/57 WPP No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131